

பாடம் 3

அக்டோபர் 12-18

# பின்னணிக்கதை: முன்னுரை

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோவான் 1:1–5; ஆதி 1:1; யோவான் 1:9–13; யோவான் 3:16–21; யோவான் 9:35–41; மத் 7:21–23; யோவான் 17:1–5.

**மனன வசனம்:** ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. யோவான் 1:1.

யோவான் புத்தகத்தின் நோக்கம் என்ன? அவர் ஏன் அந்தச் சுவிசேஷத்தை எழுதினார்? இதை முதலாம் வாரத்தில் பார்த்தோம். இந்த வாரம் அந்தச் சுவிசேஷத்தின் ஆரம்பம்பற்றிப் பார்ப்போம்; வாசகர்கள் கவனிக்கவேண்டிய விஷயத்தை பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் அதில் யோவான் சொல்கிறார். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், தங்கள் புத்தகத்தின் துவக்கத்தில் தாங்கள் சொல்ல விரும்புகிற கருத்துகளை சில வார்த்தைகளிலும் பத்திகளிலும் எழுதுவார்கள். அப்படித்தான் யோவானும் எழுதுகிறார்; அவர் முன்வைக்கிற கருத்துகள் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய முக்கியச்சத்தியங்களைச் சித்திரிக்கின்றன; அவை அனைத்துலகிற்கும் சம்பந்தப்பட்ட பிரமாண்டமான கருத்துகளின் ஒரு பகுதி; சிருஷ்டிப்புக்கு முன்னரே காணப்படுகிற சத்தியங்கள்.

புத்தகத்தின் துவக்கத்திலேயே இந்தக் கருத்துகள் வருவதால், இயேசுவே மேசியா என்பதை வாசகர்கள் அறிந்துகொள்ள முடிகிறது; ஆனால் அப்புத்தகத்தில் வருகிற நபர்கள் அந்த உண்மையை பெரும்பாலும் புரிந்திருக்கவில்லை. இயேசுவின் அனுபவங்களை சுவிசேஷகர் சொல்லும்போது, பிரமாண்டமான கருத்துகளை வாசகர்கள் புரிந்துகொள்ள முடிகிறது. இந்த மாபெரும் கருத்துகளை இயேசுவின் பூலோக வாழ்வுக்குள் அடக்கிச் சொல்கிறார்.

இந்த வாரப் பாடம் முன்னுரையுடன் ஆரம்பிக்கிறது. யோவான் 1:1-18. முக்கியக் கருத்துகளை சுருக்கமாகச் சொல்லுகிறது. அந்தக் கருத்துகள் யோவான் புத்தகத்தின் பிற இடங்களில் வரும்போது, அப்போதும் இவற்றைப் படிப்போம்.

*2024 அக்டோபர் 19 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# ஆதியிலே – தெய்வீக லோகாஸ்

**வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றி யோவான் 1:1-5 வெளிப்படுத்துவது என்ன?**

'ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது' என்கிற அற்புதமான கருத்துடன் யோவான் சுவிசேஷம் ஆரம்பிக்கிறது. யோவான் 1:1. அருமையான இந்த ஒரே வரியில், நாம் கிரகிக்க முடியாத ஆழமான கருத்து அடங்கியுள்ளது.

முதலாவது, 'ஆதியிலே' என்று சிருஷ்டிப்பு சம்பவத்துடன் சுவிசேஷகர் ஒப்பிட்டுப் பேசுகிறார். ஆதி 1:1. பிரபஞ்சம் உண்டாகும் முன்னரே அந்த வார்த்தை இருந்தது. எனவே, இயேசு நித்திய காலமும் இருப்பதை உறுதிப்படுத்துகிறார்.

அடுத்து, 'அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது'. யோவான் 1:18இல் அவர், 'பிதாவின் மடியிலிருக்கிறவர்' என்று யோவான் சுட்டிக்காட்டுகிறார். அதன் அர்த்தம்பற்றி கற்பனைசெய்ய நாம் எவ்வளவுதான் முயன்றாலும், ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது: இயேசுவும் பிதாவும் மிகவும் நெருக்கமானவர்கள்.

பிறகு, 'அந்த வார்த்தை தேவனாயிருந்தது' என்கிறார். அந்த வார்த்தை தேவனோடும், அதே நேரத்தில் தேவனாகவும் எப்படி இருக்கமுடியும்? அதற்குப் பதில் கிரேக்க மொழியில் உள்ளது. கிரேக்க மொழியில் 'அந்த/இந்த' போன்ற தனி சுட்டுச்சொற்கள் உண்டு; கிரேக்கமொழியில் 'ஒரு' என்கிற சுட்டுச்சொல் கிடையாது. 'அந்த/இந்த' என்பதற்கான கிரேக்க சுட்டுச் சொல்லானது தனிப்பட்ட பொருளை அல்லது நபரைச் சுட்டிக்காட்டுகிறது.

'அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது' என்கிற சொற்றொடரில், 'தேவன்' என்கிற சொல்லுக்குமுன் தனிச் சுட்டுச்சொல் வருகிறது; எனவே தனிப்பட்ட நபரை, அதாவது இங்கே பிதாவைக் குறிக்கிறது. 'அந்த வார்த்தை தேவனாயிருந்தது' என்கிற சொற்றொடரில், 'தேவன்' என்கிற சொல் பொது சுட்டுச்சொல்லாக வருகிறது; எனவே இங்கு அது தெய்வீகத்தின் தன்மைகளைக் குறிக்கிறது. இயேசு தேவன், அவர் பிதாவல்ல; ஆனால் அவர் தேவனுடைய தெய்வீக குமாரன்; தேவத்துவத்தின் இரண்டாவது நபர்.

இந்தக்கருத்தை யோவான் 1:3,4இல் அப்போஸ்தலர் உறுதிப்படுத்துகிறார்; சகலத்தையும் இயேசுவே சிருஷ்டித்தார் என்கிறார். முன்பு இல்லாமல் இருந்து, பிறகு வந்த அனைத்துமே, சிருஷ்டி தேவனாகிய இயேசுவின்மூலமாக மட்டுமே வந்தன.

நித்தியகாலம் முதல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர் பிதாவுடன் இருந்தார்; அவர் 'தேவனுடைய சொரூபம்', 'அவரது மேன்மை, மகத்துவத்தின் சொரூபம்', 'அவருடைய மகிமையின் பிரகாசம்.'

---

**கிறிஸ்து முற்றிலும் தேவன் என்பது ஏன் நம் இறையியல் கருத்தில் முக்கியப் பங்காக உள்ளது? இயேசு சிருஷ்டிக்கப்பட்ட ஒருவராக இருந்தால், நாம் எதை இழந்துபோவோம்? பதிலை ஓய்வு நாளில் பகிருங்கள்; கிறிஸ்து நித்திய தேவன் என்பது நம் விசுவாசத்திற்கு ஏன் முக்கியமாக இருக்கிறதென கலந்தாலோசியுங்கள்.**

# மாம்சமாகிய வார்த்தை

**தேவனாகிய கிறிஸ்து என்ன செய்ததாக யோவான் 1:1–3,14 சொல்கிறது? இது ஏன் நாம் அறியவேண்டியதிலேயே மிகமுக்கியமான சத்தியமாக இருக்கிறது?**

யோவான் தன் சுவிசேஷப்புத்தகத்தை 'இயேசு' என்கிற பெயருடனோ, மேசியா/கிறிஸ்து என்கிற அவரது பணிப்பெயருடனோ துவங்காமல், லோகாஸ் (வார்த்தை) என்கிற சொல்லுடன் துவங்குகிறார். யோவான் இதை எழுத ஆரம் பித்த சமயத்தில், பிரபஞ்சத்தின் அமைப்புபற்றிப் பேசவும், தர்க்கம்-பகுத்தறிவு பற்றிய யோசனையைக் குறிக்கவும் பல்வேறு தத்துவங்கள் இந்தச் சொல்லைப் பயன்படுத்த ஆரம்பித்திருந்தன.

மேலும், பிரபல பண்டைய தத்துவஞானியான பிளாட்டோ, எதார்த்தத்தை இருபெரும் உலகங்களாகப் பிரித்துப் பேசிவந்தார். ஒன்று, முழு பரிபூரணம் நிலவு கிற வானுலகம்; மாற்றமுடியாத உலகம். மற்றொன்று, இந்த உலகம்; இது அழி யக்கூடியது, மாறக்கூடியது, மேலே இருப்பதாக நம்பப்பட்ட பூரண உலகத்தின் நிழலாக உள்ள பூரணமற்ற உலகம். ஆனால் மேலுலகம் குறித்த கேள்விக்கு பிளாட்டோ பதிலளிக்கவேயில்லை. சில தத்துவங்கள், லோகாஸை அழியா நித்திய அமைப்புகளுக்கும், அழியக்கூடிய பூமிக்குரிய அமைப்புகளுக்கும் இடைப்பட்ட நிலையாக அடையாளம் காட்டின.

ஆனால் யோவான் அந்தச் சொல்லை முற்றிலும் வித்தியாசமான விதத்தில் பயன்படுத்துகிறார். சத்தியமாகிய லோகாஸ், பரலோகத்திற்கும் பூமிக்கும் இடையே வெறும் கருத்தளவிலான, புலன்கடந்த ஒன்றல்ல என்கிறார். லோகாஸ் என்பது ஒரு நபர்; அவர் மாம்சமாகி, நம் மத்தியில் வாசம்பண்ணின இயேசு கிறிஸ்து. யோவான் 1:14. லோகாஸ் தேவனுடைய வார்த்தை. தேவனுடைய வெளிப்பாடு; மனிதர்களாகிய நாம் முற்றிலும் புரிந்துகொள்கிற வகையில் அவர் வெளிப்பட்டார்; அதாவது நம்மில் ஒருவரானார்.

யோவான் எழுதின சுவிசேஷத்தில், லோகாஸ் நித்திய தேவனைக் குறிக் கிறது; அவர் காலமும் இடமும் உடைய பூமிக்கு வருகிறார், பேசுகிறார், செயல் படுகிறார், மனிதர்களோடு தனிப்பட்ட வகையில் தொடர்புகொள்கிறார். நித்திய தேவன் நம்மைப்போல ஒரு மனிதரானார்.

லோகாஸ் 'மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினார்' என்று அப்போஸ் தலன் கூறுகிறார். யோவான் 1:14. வாசம்பண்ணுதல் என்பதற்கான கிரேக்க வார்த் தைக்கு, கூடாரமிட்டுத் தங்குதல் என்று அர்த்தம். யாத் 25:8ஐ யோவான் சுட்டிக் காட்டுகிறார்; அங்கே தேவன் இஸ்ரவேலரிடம் தாம் அவர்கள் மத்தியில் தங்கும் படி தமக்கு ஒரு கூடாரம் அமைக்கச் சொன்னார். அதேபோல, இயேசு மனித னாக வந்ததன்மூலம், தேவகுமாரன் மனித மாம்சத்தை உடையவரானார்; மனி தர்கள் தம்மோடு தொடர்புகொள்கிற வகையில், தம் மகிமையை மறைத்து வந்தார்.

---

**யோவான் இங்கே எழுதியிருப்பவற்றின் அர்த்தம்பற்றித் தியானியுங்கள். சிருஷ்டிகராகிய தேவன் தாமே, நம்மில் ஒருவராக ஒரு மனிதனாகி, நம்மத்தியில் வாழ்ந்தார். (அவர் நமக்காக மரிக்கவும் செய்தார்!) மனிதர்மேல் தேவன் வைத்துள்ள அன்பின் உண்மைபற்றி இது என்ன சொல்லுகிறது? இந்த அற்புதமான உண்மை நமக்கு ஏன் அதிக ஆறுதலைக் கொடுக்கவேண்டும்?**

# வார்த்தைக்குச் செவிகொடுப்பதும், செவிகொடுக்காததும்

**இயேசுவை மக்கள் ஏற்றுக்கொள்ளாத உண்மைபற்றி யோவான் எவ்வாறு சித்திரிக்கிறார்? யோவான் 1:9-13.**

முன்னுரைப் பகுதியான யோவான் 1:1-18, இயேசு கிறிஸ்துவாகிய வார்த்தை (லோகாஸ்) யாரென்பதை விவரிப்பதோடுகூட, மக்கள் அவரிடம் எவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பதையும் விவரிக்கிறது. அவர் உலகத்தில் வருகிற ஒவ்வொரு மனிதனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி. உலகத்தை அந்த ஒளி பிரகாசமாக்கி, புரிதலைத் தருகிறது. சி.எஸ். லீவிஸ் அதை இவ்வாறு சொல்லுகிறார்: 'நான் கிறிஸ்தவமார்க்கத்தில் நம்பிக்கை வைக்கிறேன், ஏனென்றால் சூரியன் உதித்திருக்கிறது என்று நம்புகிறேன்; அதற்குக் காரணம், அதை நான் பார்ப்பது மட்டுமல்லாமல், அதன்மூலம் அனைத்தையும் பார்க்கிறேன்'.

யோவான் 1:9இல் புதைந்துள்ள அர்த்தங்களை யோசியுங்கள். ஒளி அனைவருக்கும் கிடைக்கிறது, ஆனால் எல்லாரும் அதை ஏற்றுக்கொள்வதில்லை. இயேசுவை மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்கிறார்கள் அல்லது புறக்கணிக்கிறார்கள் என்பதுபற்றியும் யோவான் பேசுகிறார்; அதை நாளைய ஆராய்ச்சியில் படிக்கலாம். அந்தக் கருத்தை இங்கேயே துவங்குகிறார். வருத்தமான தொடர்கதை என்னவென்றால், மேசியா தம் சொந்த மக்களான இஸ்ரவேல் மக்களிடம் வந்தார். அநேகர் அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை.

யூதர்கள் பலர் இயேசுவைப் புறக்கணித்த வருத்தகரமான நிலைபற்றியே ரோமர் 9-11இல் பவுல் பேசுகிறார். ஆனால் வருத்தமான தொனியோடு முடிக்கவில்லை; மாறாக, புறஜாதியாரோடுகூட யூதர்கள் பலரும் இயேசுவை தங்கள் மேசியாவாக ஏற்றுக்கொள்வார்கள் என்கிறார். மேலும், யூதர்களுக்கு எதிராக புறஜாதியார் மேன்மைபாராட்டக்கூடாதென்றும் எச்சரிக்கிறார்: 'சுபாவத்தின்படி, காட்டொலிவமரத்திலிருந்து நீ வெட்டப்பட்டு, சுபாவத்திற்கு விரோதமாய் நல்ல ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்பட்டிருந்தால், சுபாவக்கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா?' ரோமர் 11:24.

அதே தொனியில் யோவானும் பேசுகிறார்; அதாவது, இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்கிற அனைவரும் தேவனுடைய பிள்ளைகளாவார்கள். அவருடைய நாமத்தின்மேல் விசுவாசம் வைப்பதால் அது சாத்தியமாகிறது. யோவான் 1:12,13.

இதுதான் அந்தச் சுவிசேஷத்தின் முன்னுரைக்கும் முடிவுரைக்கும் இடையே இணைப்பாக இருக்கிறது. இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும் இதை தான் எழுதியதாக யோவான் 20:31 இல் அப்போஸ்தலர் சொல்லுகிறார். எனவே, முகவுரையும் இறுதியுரையும் ஒரு விதத்தில் ஒரே கருத்தைக் கூறுகின்றன. அத்தொடர்புதான் யோவான் எழுதின சுவிசேஷத்தின் முக்கிய இலக்கும்கூட; அதாவது, இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வதன்மூலம் மக்கள் இரட்சிக்கப்படுகிறார்கள்.

---

**தேவனுடைய மகனாக, மகளாக மாறியதன்மூலம் உங்கள் வாழ்க்கை எவ்வாறு மாறியிருக்கிறது?**

# மீண்டும் வருகிற கருத்துகள் – நம்பிக்கை/அவநம்பிக்கை

**முன்னுரையில் வருகிற நம்பிக்கை/அவநம்பிக்கை கருத்தானது பின்வரும் வசனங்களில் எவ்வாறு மீண்டும் வருகின்றது? யோவான் 3:16-21; யோவான் 9:35-41; யோவான் 12:36-46.**

யோவான் எழுதின சுவிசேஷத்தில், இரண்டு பிரிவு மக்களை முக்கியமாகப் பார்க்கமுடிகிறது: ஒரு பிரிவினர் இயேசுவை விசுவாசித்து, அவரை மேசியாவாக ஏற்றுக்கொண்டவர்கள்; இரண்டாவது பிரிவினர், அவரை விசுவாசிக்க வாய்ப்பிருந்தும் விசுவாசிக்கத் தீர்மானிக்காதவர்கள்.

சீடர்களில் பதினொரு பேர், நிக்கொதேமு (மெதுவாக விசுவாசத்தை ஏற்றுக்கொண்டவர்), கிணற்றருகே வந்த ஸ்திரீ, பிறவிக்குருடன் ஆகியோர் முதல் பிரிவைச் சேர்ந்தவர்கள். பரிசேயர்கள், பிரதான ஆசாரியர்கள், 5000 பேரைப் போஷித்த அற்புதத்தை அனுபவித்த மக்கள், இயேசுவின் சீடர்களில் ஒருவனான யூதாஸ் ஆகியோர் இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

விசுவாசம்/நம்பிக்கை என்பதற்கான கிரேக்கப் பெயர்ச்சொல் **பிஸ்டிஸ்**; இது யோவான் சுவிசேஷத்தில் வரவேயில்லை. ஆனால் அதன் வினைச்சொல்லான **பிஸ்டியோ** (விசுவாசித்தல்) 98 முறை வருகிறது; புதிய ஏற்பாடு முழுவதிலும் 241 முறை வருகிறது! இந்த வினைச்சொல் யோவான் புத்தகத்தில் மிகமுக்கியக் கருத்தாக உள்ளது. பெயர்ச்சொல்லுக்குப் பதிலாக வினைச்சொல்லைப் பயன்படுத்துவது, செயல்படுகிற கிறிஸ்தவராக மாறவேண்டியதைக் காட்டுகிறது. இயேசுவை விசுவாசிப்பது எல்லாருமே செய்வதுதான்; ஆனால் அது வெறும் நம்பிக்கையில் அல்ல, நாம் வாழுகிற விதத்தில் வெளிப்படவேண்டும். பிசாசு கூட இயேசுவை விசுவாசிக்கிறது. யாக் 2:19.

இரு பிரிவினருக்கும் இடையேயுள்ள முக்கிய வித்தியாசம், இயேசுவிடம் அவர்கள் நடந்துகொள்கிற விதம்தான். விசுவாசிகளும் அல்லது புதிதாக அவரை விசுவாசிப்பவர்களும், அவர் தங்களைக் கண்டித்தாலும், தங்களுக்கு விருப்பமில்லாததைச் செய்தாலும், தயக்கமின்றி அதை ஏற்றுக்கொள்வார்கள்; இயேசுவிடம் வருவார்கள், அவரைவிட்டு ஓடமாட்டார்கள். அவர்தாமே அவர்கள்மீது பிரகாசிக்கிற ஒளி. விசுவாசத்தால், நம்புவதால், தேவபிள்ளைகளாகிறார்கள்.

மாறாக அவிசுவாசிகளோ, பொதுவாக இயேசுவிடம் மல்லுக்கு நிற்கவே அவரிடம் வருகிறார்கள். ஒளியைவிட இருளை விரும்புகிறார்கள். அவர் சொல்வதை ஏற்றுக்கொள்ள சங்கடப்படுகிறார்கள்; அவர் பாரம்பரியங்களை உடைப்பதாகவும், தங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில்லை என்றும் எண்ணுகிறார்கள். அவரது ஒளி தங்களை அளந்து, தங்களை நியாயந்தீர்ப்பதற்குப் பதிலாக, அவரை நியாயந்தீர்க்கத் துணிகிறார்கள். இந்த மனநிலையைத்தான் மத தலைவர்களிடம் மீண்டும் மீண்டும் பார்க்கமுடிகிறது; தேசத்தின் ஆவிக்குரிய வழிகாட்டிகளாக இருந்ததால், அவர்கள்தாம் இயேசுவை முதலில் ஏற்றுக்கொண்டிருந்திருக்க வேண்டும்.

---

**இயேசுவை மேசியாவென அறிவுப்பூர்வமாக அறிந்திருப்பதைவிட, அவர்மேலுள்ள விசுவாசத்தை எவ்வாறெல்லாம் வாழ்ந்து காட்டுகிறீர்கள்? இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தை அறிவது ஏன் முக்கியமானது? மத் 7:21-23.**

# மீண்டும்மீண்டும் வருகிற கருத்து – மகிமை

**யோவான் 17:1-5. 'பிதாவே, வேளை வந்தது, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப் படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்' என்று இயேசு சொன்னதின் அர்த்தம் என்ன?**

நேற்றைய ஆராய்ச்சியின்படி, யோவான் சுவிசேஷத்தில் உலகசம்பந்தமாக, மனிதர்சம்பந்தமாக என்ன பார்த்தோம். இயேசு யாரென்பதையும், அவரது செயலை மனிதர்கள் எவ்வாறு அணுகினார்கள் என்பதையும் பார்த்தோம். இன்றைய ஆராய்ச்சியில், தெய்வீக ரீதியான கருத்தைக் கவனிப்போம்.

பிரபஞ்ச சம்பந்தமான கதைக்களத்துடன் முன்னுரை ஆரம்பிக்கிறது. இயேசுவானவர் தேவ குமாரன்; பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தவர். முன்பு இல்லாமலிருந்து பின்பு உண்டான அனைத்துமே இயேசுவின்மூலமாகமட்டுமே வந்தது. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. யோவான் 1:3. அவர் மனிதனாக அவதரித்ததில் அவரது மகிமை வெளிப்பட்டது. யோவான் 1:14. மனிதர்களிடமிருந்து கனம் பெறுவதை யோவான் மகிமை என்கிறார். அதற்கான கிரேக்க வார்த்தை டாக்ஸா; பிரகாசம், மாட்சிமை, புகழ், கனம் என்று அர்த்தம். தேவனிடமிருந்து கனம் அல்லது மகிமை பெறுவதை 'மகிமைப்படுத்தல்' என்கிறார். அதற்கான கிரேக்க வார்த்தை டாக்ஸசோ; துதித்தல், கனப்படுத்தல், மேன்மைப்படுத்தல், மகிமைப் படுத்தல் என்று அர்த்தம்.

இயேசு மகிமைப்படுவது அதற்கான வேளை வருவதில் இருந்ததாக யோவான் கூறுகிறது; அந்த வேளை அவரது மரணம். யோவான் 2:4; 7:30; 8:20; 12:23-27; 13:1; 16:32; 17:1. சிலுவைதான் அவரது மகிமையின் வேளை.

இது ஒரு முரண்கருத்து; ஏனென்றால் பண்டைய ரோம உலகில் சிலுவை மரணம் மிகவும் கேவலமான, நிந்தனைமிக்க தண்டனையாகக் கருதப்பட்டது. தேவன் சிலுவையில் தொங்கினார் என்கிற நம்புவதற்கரிய இந்த வேறுபாடு, மனிதவாழ்வில் தேவன் இடைபடுவதை எடுத்துக்காட்டுகிறது.

மனிதகண்ணோட்டத்தில், இயேசு வியாகுலத்தோடு மரித்தார்; புறக்கணிக்கப்பட்ட ஒரு குற்றவாளியாக, பெலவீனநிலையில், 'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்' என்று கதறினார். சிலுவையின் இந்த மனிதரீதியான, இருண்ட பக்கத்தை மத்தேயு, மாற்கு புத்தகங்கள் சொல்லுகின்றன. மத் 27:46; மாற்கு 15:34. ஆனால் சிலுவையின் மகிமையான பக்கத்தை லூக்கா, யோவான் புத்தகங்கள் சொல்லுகின்றன. லூக்கா 23:32-47, யோவான் 19:25-30. அது இரட்சிப்பும், இரக்கமும் வெளிப்படுகிற இடம்; அங்கே தேவ குமாரன் தம்மை, பிதாவிடம் ஒப்படைக்கிறார். எத்தகைய ஒரு முரண்பாடு! தேவனுடைய மிகப் பெரிய மகிமை, அவரது மிகப்பெரிய அவமானத்தில் வெளிப்பட்டது; அதாவது, உலகத்தாரின் பாவத்தை தம்மேல் சுமந்ததில் வெளிப்பட்டது.

---

**பாவத்திலிருந்து நம்மை இரட்சிப்பதற்கு தேவனே சிலுவையில் தொங்கவேண்டிய நிலை ஏற்பட்டதுபற்றி யோசியுங்கள். பாவம் உண்மையில் எவ்வளவு மோசமானது என்பது பற்றி இது சொல்லுவது என்ன?**

# மேலும் படிக்க:

கர்த்தரும், தேவ குமாரனுமாகிய இயேசு கிறிஸ்து, நித்திய காலம் முதல், தனிப்பட்ட ஒரு நபராக, ஆனால் பிதாவுடன் ஒன்றாக இருந்தார். பரலோகத்தின் ஈடுஇணையற்ற மகிமையாக இருந்தார். பரலோக ஜீவிகளின் தளபதியாக இருந்தார், அவருக்குமுன் வணங்கி நின்ற தூதர்களின் தொழுகையை தம் உரிமையாகப் பெற்றார். அது தேவனிடமிருந்து கொள்ளையிட்டது அல்ல. நீதி 8:22–27.

கிறிஸ்து உலகத்தோற்றத்திற்கு முன்னரே பிதாவுடன் ஒன்றாயிருந்தார் என்கிற சத்தியத்தில் ஒளியும் மகிமையும் உள்ளது. இந்த ஒளி இருண்ட ஓர் இடத்தில் பிரகாசித்து, தெய்வீகமான, அசலான மகிமையால் அதை ஜொலிக்கச்செய்கிறது. முற்றிலும் புதிரான இந்தச் சத்தியமானது, மறைபொருளும் விவரிக்கமுடியாததுமான பிற சத்தியங்களை விளக்குகிறது; அதேசமயம் அணுகமுடியாததும் புரியமுடியாததுமான ஒளிக்குள் வைக்கப்பட்டுள்ளது.

இயேசு, 'நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்' என்று சொன்னார். யோவான் 12:32. உலகத்தின் பாவத்திற்காக மரித்த இரட்சகராக கிறிஸ்துவை பாவிக்கு வெளிப்படுத்த வேண்டும்; கல்வாரிச் சிலுவைமீது இருக்கிற தேவ ஆட்டுக்குட்டியானவரை நாம் நோக்கிப் பார்க்கும்போது, மீட்பின் மறைபொருள் நம் மனங்களில் வெளிப்படத் தொடங்குகிறது; தேவனுடைய தயவு மனந்திரும்புதலுக்கு வழிநடத்துகிறது. கிறிஸ்து பாவிகளுக்காக மரித்ததில், புத்திக்கெட்டாத அன்பை வெளிப்படுத்தினார்; பாவி இந்த அன்பைப் பார்க்கும்போது, அது அவன் இருதயத்தை மிருதுவாக்குகிறது; அவன் மனதில் தாக்கத்தை உண்டாக்குகிறது; அவன் ஆத்துமாவை நொறுங்குண்டுபோக வைக்கிறது. சரியானதைச் செய்யவேண்டும் என்கிற மெய்யான ஆசையுடன் எப்போதெல்லாம் மக்கள் சீர்திருந்த முயற்சிக்கிறார்களோ, அப்போது கிறிஸ்துவின் வல்லமைதான் அவர்களை அதைநோக்கி இழுக்கிறது. அவர்கள் அறியாத ஒரு செல்வாக்கு அவர்கள் ஆத்துமாவில் கிரியைசெய்கிறது; மனச்சாட்சி உயிரடைகிறது; வெளிப்புற வாழ்க்கை சீர்திருந்துகிறது. கிறிஸ்து அவர்களை தம் சிலுவையைநோக்கிப் பார்க்க, அவர்களது பாவங்கள் குத்தினவரை நோக்கிப்பார்க்க இழுக்கும்போது, கற்பனையின் அவசியம் உள்மனதில் தெளிவாகிறது.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *யோவான் ஏன் இயேசுவை சிருஷ்டிகராக முன்வைத்துப் பேசத்துவங்குகிறார்? எல்லா இறையியலுக்கும் சிருஷ்டிப்பு முக்கியமாக இருப்பதை இது எவ்வாறு காட்டுகிறது? அப்படியானால், வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, சிருஷ்டிப்பு குறித்த ஒரு சரியான புரிதலை நாம் பெற்றிருக்க வேண்டியது ஏன் முக்கியம்?*

2. *ஞாயிற்றுக்கிழமை ஆராய்ச்சியின் கடைசியில் கேட்கப்பட்ட கேள்விபற்றி அதிகமாகத் தியானியுங்கள். சிலுவையில் நித்திய தேவன் மரிக்காமல், சிருஷ்டிக்கப்பட்ட ஒருவர் மரித்திருந்தால், என்னவாயிருக்கும்? இயேசு நித்திய தேவன் இல்லையென்றால், நாம் எதை இழந்துபோவோம்?*

# ஓய்வுநாள் விதை

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

பழங்குடி அமெரிக்கர் ஒருவர், கட்டிடப்பணி நடைபெற்றுவந்த ஓர் இடத்திற்குச் சென்றார். அமெரிக்காவின் வாஷிங்டனில் வேபடோ எனும் இடத்தில் சர்வதேச மையக் கட்டிட வேலை நடைபெற்று வந்தது. "இங்கு என்ன கட்டுகிறீர்கள்? இன்னொரு சபையா? எந்த நாளில் ஆராதனை செய்யவேண்டும் என்பதே உங்களுக்குத் தெரியாதே?" என்று கேட்டார்.

செவந்த–டே அட்வென்டிஸ்டுகள்பற்றிக் கேள்விப்பட்டிராத அந்த மனிதரிடம், அந்தக் கட்டுமான மேற்பார்வையாளரான ஜெஃப் வெய்ஜான் பேசினார். அது ஞாயிறு ஆராதனை சபையாகஇருக்குமென்றுஅந்தமனிதர்நினைத்திருக்கிறார்;ஆனால்சனிக்கிழமையில்தான் சிருஷ்டிகரைத் தொழவேண்டும் என்று நம்பி வந்திருக்கிறார்.

ஜெஃப்புக்கு ஆச்சரியமாக இருந்தது. "பழங்குடி அமெரிக்கர்களுக்கு ஓய்வுநாளைக் கடைப்பிடிக்கிற பழக்கம் இருந்திருக்கிறது என்பதை முதன்முதலாக அப்போதுதான் அறிந்துகொண்டேன்" என்று சொன்னார்.

பிறகு, பழங்குடி அமெரிக்கர்களின் வரலாறு அறிந்த ஒருவரிடம் ஜெஃப் அதுபற்றி விசாரித்தார். வேபடோ அமைந்துள்ள யகாமா இந்தியன் சரணாலயப் பகுதியில் ஒன்று அல்லது இரண்டு பழங்குடி இனத்தவர்கள் ஏழாம்நாள்தான் சிருஷ்டிகருடைய நாளெனக் கருதி, அந்த நாளில் சிருஷ்டிகரைத் தொழுதுவந்ததாகச் சொன்னார்.

பழங்குடி இன மக்களின் இருதயங்களில் தேவன் ஓய்வுநாள் விதையை விதைத்ததை எண்ணி, ஜெஃப்பும் அவரது மனைவி டெர்ரியும் பழங்குடி அமெரிக்கர்களுக்கு ஊழியம் செய்ய ஊக்கம் பெற்றார்கள். 1990இல் எடுக்கப்பட்ட ஒரு பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் உதவியால் அந்த ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. சர்வதேச மையமானது 2001இல் திறக்கப்பட்டது; அது ஒரு பல்நோக்கு மையமாகத் திறக்கப்பட்டிருப்பதே அதிலுள்ள சிறப்பு. அங்கே ஓய்வுநாள் ஆராதனைக் கூடம், உணவறை, அன்னையர் தின அறை அமைந்துள்ளன; இந்த அறையில் 300 – 400 பேர் கூடலாம். அதுபோக, கூடைப்பந்து மற்றும் கைப்பந்து அரங்கங்களும் உள்ளன; அங்கே இரவுகளில் சுமார் 200 சிறுவர்களும் அவர்களது பெற்றோர்களும் கூடுவதுண்டு. அதுபோக பகல்நேர முகாம்களும், விடுமுறைகால வேதாகமப் பள்ளிகளும், பள்ளிநேரத்திற்கு பிறகான பாடப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

பழங்குடி அமெரிக்கர்களும், மற்றவர்களும் அங்கே வாடகைக்கு அறைகள் எடுக்கலாம். "இங்குள்ள மக்கள் கூடுவதற்கென இடம் இல்லாத்தால்தான் இந்தக் கட்டிடத்தைக் கட்டினதற்கான ஒரு நோக்கம்" என்று ஜெஃப் சொன்னார்.

குறிப்பிட்ட சம்பவம் என்னவென்றால், பழங்குடி அமெரிக்க தலைவர் ஒருவர் சுகாதார வகுப்புகள் நடத்துவதற்கு அங்குள்ள கேளிக்கைகூடத்தில் அறை எடுப்பதற்கு பதிலாக, இந்தக் கட்டிடத்தில் வாடகைக்கு அறை எடுத்தார்; சூதாட்டம் மக்களைக் கெடுப்பதாக காரணம் சொன்னார். "அவருக்கு அந்தக் கேளிக்கைகூடத்தின்மீது நாட்டம் இல்லை என்பது தெரிந்தது" என்று ஜெஃப் சொன்னார். அந்த மையம் வெற்றிகரமாக அமைந்ததால், கனடா உட்பட்ட நாடுகளிலும் அத்தகைய மையங்களைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

